# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05-ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்: 9/2021**

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம் மற்றும் அஞ்சல், நெ.3 தாமரைக்குளத் தெருவில் வசிக்கும் பொன்னுசாமி மகன், இந்து, சுமார் 53 வயதுடைய பழனிச்சாமி

....வாதி

-எதிர்-

கடலூர் மாவட்டம், பண்ரூட்டி வட்டம், பண்டரக்கோட்டை போஸ்ட், புதுப்பேட்டை, நெ.5, பிள்ளையார் கோயில் தெருவில் வசிக்கும் மண்ணாங்கட்டி மகன், இந்து, சுமார் 52 வயதுள்ள மூர்த்தி

...பிரதிவாதி

கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து அசல் தொகை ரூ.70,000/- மற்றும் பின்வட்டி சேர்த்து ரூ.94,874-ஐ செலவுத்தொகையுடன் பெறவேண்டி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தாக்கல் செய்த நாள் 19.1.2021. வழக்கின் மதிப்பு ரூ.94,874/ இதற்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 22-ன்படி ரூ.2847-ஐ நீதிமன்றக் கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ளது. 25.1.2018, 4.1.2021 ஆகிய தேதிகளில் புவனகிரியில் வழக்கு மூலம் ஏற்பட்டுள்ளது.

இந்த வழக்கானது கடந்த 29.3.2021 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சாந்தி, அவர்கள் முன்னிலையாகி, பிரதிவாதி நீதிமன்றம் வருகையின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டு, வாதி தரப்பை கேட்டறிந்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.....

## ***<u>தீ ர் ப் பா ணை</u>***

(1) பிரதிவாதி வாதிக்கு ரூ.94,874- -ஐயும், அதில் அசல் தொகை ரூ.70,000-த்திற்கு இந்த வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை தேதி வரை வருடத்திற்கு 9 சதவிகித வட்டியுடனும், அதன் பின்னர் தொகை முழுவதும் கொடுத்து பைசலாகும்வரை 6 சதவிகித பின்வட்டியுடனும் சேர்த்து செலுத்தவேண்டும்.

(2) வாதிக்கு, பிரதிவாதி இந்த வழக்கின் தொடர் செலவுத் தொகையாக ரூ.3662.00/-ஐ செலுத்த வேண்டும்.

பிரதிவாதி தரப்பில் செலவுப்பட்டியல் தாக்கல் இல்லை.

**வாதியின் செலவு விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | முத்திரை கட்டணம் | ரூ. | 2847.00 |
| 2 | வக்காலத்து | ரூ. | 10.00 |
| 3 | படிச்செலவு | ரூ. | 5.00 |
| 4 | தட்டச்சு செலவு | ரூ. | 200.00 |
| 5 | அறிவிப்பு கட்டணம் | ரூ. | 100.00 |
| 6 | வழக்கறிஞர் கட்டணம் | ரூ. | 500.00 |
| | **மொத்தம்** | **ரூ.** | **3662.00** |

என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் பொறிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 05-ம் நாள் வழங்கப்படுகிறது.

(Sd/-.V.Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.